

திருச்சியில் கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், சமூகநீதி போராளி இமானுவேல் சேகரன் நினைவு நாளை முன்னிட்டு தில்லை நகரில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் இம்மானுவேல் சேகரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், டோல்கேட் சுப்பிரமணி, குடமுருட்டி சேகர் கோட்டதலைவர் துர்கா தேவி, பகுதி செயலாளர் இளங்கோ உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் இம்மானுவேல் சேகரனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள்.



புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், கீழக்குறிச்சி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 09.09.2025 அன்று பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், உதவி ஆணையர் (கலால்) திருமால் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் ஒன்றிணைந்து

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடித்திடுவீர்!

## உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றிய செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், செப். 12 -

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா கூட்டம் 10.09.2025 புதன்கிழமை அன்று மதியம் 12.00 மணியளவில் முக்கோணம் சூர்யா மஹாலில் ஒன்றிய அவைத்தலைவர் ஞானசேகரன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் க.செந்தில் குமார் வரவேற்புரையில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூடத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல. பத்மநாபன் ஆகியோர் கருத்துக்களை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாவட்டப் பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, உடுமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், பொதுக்குழு உறுப்பினர் பருதவவர்த்தினி, பொதுக்குழு முன்னாள் உறுப்பினர், திருமூர்த்தி மலை அறங்காவலர் குழு உறுப்பினர் ஈசிஆர்.ரவி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா செல்வராஜ், உடுமலை நகர்மன்ற தலைவர் எம்.மத்தீன், தளி பேரூர் கழக செயலாளர் வெ.உதய குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பொன்ராஜ், உடுமலை ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் மகாலட்சுமி முருகன், முன்னாள் துணை தலைவர் சண்முக வடிவேல் உள்பட ஒன்றியக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் மாவட்ட, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

தீர்மானம் 1 : ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக கடந்த ஆகஸ்டு 30 நாள் சென்று 33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 15,516 கோடி புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்தும். 17,613 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கி, தமிழகத்தினை முதன் மாநிலமாக உருவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களுக்கு உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில் பாராட்டி நன்றி தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தீர்மானம் 2 : “ஓரணியில் தமிழ்நாடு” புதிய உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடித்து கழகம் நிர்ணயித்த 40% சதவீத இலக்கை எட்டியதோடு மட்டுமில்லாமல் மேலும் உறுப்பினர்கள் சேர்த்து கொண்டு, மாவட்ட கழகத்திற்கு பெருமை சேர்த்து வரும் நிர்வாகிகளுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக எண்ணற்ற மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து கொள்ளப்படுகிறது. மேலும், 40% சதவீதத்திற்கு குறைவான உறுப்பினர் சேர்க்கையுடைய பாகங்களை விரைவாக முடிப்பதோடு மட்டுமின்றி, குறைந்தபட்சம் ஒரு நபருக்கு ஒரு தொலைபேசி எண் வாங்கியும், அதிகமான உறுப்பினர்களை சேர்க்கவும், 100 நபர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர் நியமனம் சரிபார்த்தும் உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியத்துக்குட்பட்ட ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும் ஒருங்கிணைந்து செயலாற்றிட வேண்டுமென இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 3 : கழகத் தலைவர், நலத்திட்ட நாயகர் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வருகை புரிந்து, நேதாஜி மைதானத்தில் திருப்பூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, சுமார் 35,000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்து மேற்கு மண்டல மக்களிடத்து அன்பையும், பாசத்தையும் பெற்ற நலத்திட்ட நாயகருக்கு உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியச்செயற்குழுகூட்டத்தின் வாயிலாக நன்றி தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தீர்மானம் 4 : தந்தை பெரியார் பிறந்தநாள், பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாள் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளையும் கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் செப்டம்பர் 15ம் தேதி அன்று தி.மு.க. முப்பெரும் விழா நடைபெறுவது வழக்கம். தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் தலைமையில் “தி.மு.க. முப்பெரும் விழா - 2025” வருகின்ற 17.09.2025 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் கரூர், கோடாங்கிபட்டியில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் உடுமலைப்பேட்டை மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், BLA, BLC, மற்றும் BDA, உறுப்பினர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு பெரியார் உறுதிமொழி ஏற்கவேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நேபாளத் தலைநகர் – காத்மாண்டுவில்

# பன்னாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு மாநாடு!

## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் அமிர்தகுமார் பங்கேற்பு!

காத்மாண்டு, செப். 12 -

உலகளாவிய தொழிற்சங்கமான பன்னாட்டு தொழிற்சங்க கூட்ட மைப்பின் தெற்காசிய மாநாடு நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் கலந்து கொண்டு பேசினார்.

இம்மாநாட்டில் ஜப்பானில் பணிபுரியும் பொதுப் பணியாளர்கள் அனைவருக்கும் தொழிலாளருக்கான அடிப்படை உரிமை வழங்க வேண்டி தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத் தலைவர் த.அமிர்தகுமார் முன்மொழிந்த இத்தீர்மானத்தை அனைவரும் வழிமொழிந்ததால் இத்தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நேபாளத்தில் தற்போது கலவரங்கள் கட்டுக்கடங்காமல் உள்ள நிலமையையும் பரிசீலித்த இம்மாநாடு இது தொடர்பாகவும் சிறப்பு தீர்மானம் முன்மொழிந்து அத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

### மாவட்ட துணைச் செயலாளர் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

### வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளராக (பொது) தேர்ந்தெடுக்கப்பட்ட டிவி.கோகுலகண்ணன் அவர்கள் அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இரா.நாகன் மறைவெய்திய காரணத்தாலும், மாவட்ட துணைச் செயலாளர் (பொது) மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்;

மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, செப்டம்பர் 12 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/– வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர/ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை – 18.
நாள் : 10–09–2025.

துரைமுருகன்,
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## சேலம் மத்திய மாவட்டம்

# சேலம் மாநகரம் - 31 மற்றும் 49 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

### தலைமைக் கழக அறிவிப்பு!

**சேலம் மத்திய மாவட்டம், சேலம் மாநகரம், கோட்டை பகுதி,** 31வது வட்டச் செயலாளர் எஸ். சையத் இப்ராஹிம் அவர்கள், கோட்டை பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திரு. ஏ. அப்துல் ரசாக்** (68/39, துபால் அகமது தெரு, சேலம்-636 001) அவர்கள் 31வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

**அன்னதானப்பட்டி பகுதி,** 49வது வட்டச் செயலாளர் குமரன் ர.கார்த்திகேயன் அவர்கள் அன்னதானப்பட்டி பகுதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. **கே.ஆர்.டி.சசிகுமார்** (4/700, அகரம் காலனி, அன்னதானப்பட்டி, சேலம்-636002) அவர்கள் 49வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 10.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி, 152வது வட்டத்தைச் சேர்ந்த அ.ஜெயசீலன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 10.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

### செப்டம்பர் 12 (2022)



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் “அண்ணா விருது” பெற்றவர்.


கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுக்கோட்டை க. வீரய்யா

### செப்டம்பர் 12 (1993)



புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.